பிரசார்பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

26 08 2026 WEDNESDAY 6 30 PM

வணக்கம் - மாநிலச்செய்திகள்

தலைப்புச் செய்திகள்

- நேபாளத்தில் நேரிட்ட காட்டாற்று வெள்ளம் மற்றும் நிலச்சரிவில் தமிழகத்தைச் சேர்ந்த 57 பேர் சிக்கியுள்ளனர்.
- நாடுமுழுவதும் காய்ச்சல் கண்காணிப்பு நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளதாக மத்திய அரசு கூறியுள்ளது
- மாநிலத்தில் உள்ள 50 முதுநிலை கோவில்களில் செல்ஃபோன் கொண்டு செல்ல தடை விதிக்கப்படவுள்ளதாக தமிழக அரசு தெரிவித்துள்ளது.
- தமிழகத்தின் ஒரு சில பகுதிகளில் அடுத்த இரு தினங்களுக்கு மழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.
- ஆசிய ஜூனியர் கிளாசிக்கல் செஸ் சாம்பியன் போட்டியில் இந்தியா இரண்டு தங்கப்பதக்கங்களை வென்றது.

>>>>>>>><<<<<<

நேபாளத்தில் நேரிட்ட காட்டாற்று வெள்ளம் மற்றும் நிலச்சரிவு காரணமாக தமிழகத்தைச் சேர்ந்த 57 சுற்றுலாப் பயணிகள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

Rasuwa மாவட்டத்தில் பெய்த கனமழை காரணமாக வெள்ளம் மற்றும் நிலச்சரிவு ஏற்பட்டது.

முக்திநாத் உள்ளிட்ட ஆன்மீக தலங்கள் மற்றும் சுற்றுலா தலங்களுக்குச் சென்ற தமிழகத்தைச் சேர்ந்த 57 பேர் இதில் சிக்கியுள்ளனர்.

தஞ்சாவூர் மாவட்டம், கும்பகோணத்தில் உள்ள சுற்றுலா ஏஜென்ஸி மூலம் இவர்கள் அழைத்துச் செல்லப்பட்டதாக அந்த ஏஜென்ஸி உரிமையாளரின் தந்தை சையத் சாதிக் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

(சவுண்ட் பைட் - ஏற்பாட்டாளர் 64 செகண்ட்ஸ்)

இதற்கிடையே, நேபாளத்தில் சிக்கியுள்ள தமிழர்களின் நிலை குறித்த விவரங்களை அறிந்து கொள்வதற்கான உதவி எண் அறிவிக்கப்பட்டுள்ளது.

92895 16712 என்ற எண்ணை தொடர்பு கொண்டு விவரங்களை அறிந்து கொள்ளலாம் என்று மாநில அரசு கூறியுள்ளது.

>>>>>>>><<<<<<

விரைவான பொருளாதார வளர்ச்சியை கண்டு வரும் நாடாக இந்தியா திகழ்கிறது என்று மத்திய நிதியமைச்சர் திருமதி. நிர்மலா சீதாராமன் கூறியுள்ளார்.

அரசுமுறைப் பயணமாக கனடா சென்றுள்ள அவர், இன்று Toronto-வில் இந்திய வம்சாவளியைச் சேர்ந்த தொழிலதிபர்களிடையே கலந்துரையாடினார்.

உலக தரத்திற்கு இணையான டிஜிட்டல் கட்டமைப்பு இந்தியாவில் ஏற்படுத்தப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

நகரமயமாக்கல் பணிகள் விரைவுபடுத்தப்பட்டுள்ளதாகவும், நடுத்தர வர்க்கத்தினரின் நலனுக்காக எண்ணற்ற திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருவதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

இதன் காரணமாக அனைத்து துறைகளிலும் புதிய வாய்ப்புகள் உருவாகியுள்ளதாகவும் திருமதி. நிர்மலா சீதாராமன் கூறினார்

>>>>>>>><<<<<<

நாடுமுழுவதும் காய்ச்சல் கண்காணிப்பு நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளதாக மத்திய அரசு கூறியுள்ளது.

இதுதொடர்பாக, மாநில அரசுகளுக்கு உரிய அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளதாக சுகாதாரத் துறையின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

இதற்கிடையே, பன்றிக் காய்ச்சல் பரவல் குறித்து பொதுமக்கள் அச்சம் கொள்ளத் தேவையில்லை என்று இந்திய மருத்துவ சங்கம் கூறியுள்ளது.

இந்த வகையில், தற்போது பரவி வரும் தொற்று வலிமை குறைந்தது என்றும், இதற்காக நோய் எதிர்ப்பு மருந்துகளை உட்கொள்ள வேண்டிய அவசியமில்லை என்றும் அந்த சங்கத்தின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

மருத்துவர்களின் உரிய ஆலோசனையின்றி மருந்துகளை உட்கொள்ளக்கூடாது என்றும் அந்த செய்திக்குறிப்பில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

>>>>>>>><<<<<<

கோவில்களில் ரீல்ஸ் மற்றும் புகைப்படம் எடுப்பதை தடுப்பதற்கு ஏதுவாக, 50 முதுநிலை கோவில்களில் செல்ஃபோன் கொண்டு செல்வதற்கு தடை விதிக்கப்படவுள்ளதாக இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் திரு. ரமேஷ் கூறியுள்ளார்.

திருவண்ணாமலையில் உள்ள அருள்மிகு அருணாச்சலேஸ்வரர் ஆலயத்தில் ஆய்வு செய்த பின்னர் செய்தியாளர்களிடம் அவர் பேசினார்.

திருக்கோவில்கள் குறித்த விவரங்களை அறிந்து கொள்வதற்கென இணையதளம் உருவாக்கப்படவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

மாநிலத்தில் த.வெ.க. அரசு பொறுப்பேற்ற பின்னர், பல்வேறு கோவில்களில் திருப்பணிகள் நடைபெற்று வருவதாகவும் திரு. ரமேஷ் கூறினார்.

>>>>>>><<<<<<

தூய்மைப் பணியாளர்களின் கோரிக்கைகளை த.வெ.க. அரசு நிறைவேற்ற வேண்டும் என்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் திரு. வீரபாண்டியன் வலியுறுத்தியுள்ளார்.

இன்று திருப்பத்தூரில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், கோவிட் போன்ற பேரிடர் காலங்களிலும் தூய்மைப் பணியாளர்கள் தங்கள் உயிரை பணயம் வைத்து பணியாற்றியதாக தெரிவித்தார்.

காவிரி நீர் மேலாண்மை ஆணையத்தின் உத்தரவுப்படி, தமிழகத்திற்கு உரிய நீரை வழங்க வேண்டிய பொறுப்பு கர்நாடக அரசுக்கு உள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

தேர்தல் நேரத்தில் அளித்த வாக்குறுதிகள் அனைத்தையும் நிறைவேற்ற த.வெ.க. அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் திரு. வீரபாண்டியன் கேட்டுக் கொண்டார்.

>>>>>>><<<<<<

தமிழகத்தின் ஒரு சில பகுதிகளில் அடுத்த இரு தினங்களுக்கு மழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையத்தின் தென் மண்டல இயக்குநர் டாக்டர் வி ஆர் துரை தெரிவித்துள்ளார்.

எமது செய்தியாளரிடம் பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

(Sound Byte - வி ஆர் துரை - 36 Sec. )

>>>>>>><<<<<<

தொடர் விடுமுறை காரணமாக, நாமக்கல் மாவட்டம், கொல்லிமலைக்கு செல்லும் சுற்றுலா பயணிகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது.

அங்குள்ள நீர்வீழ்ச்சிகளில் நீர்வரத்து அதிகரித்துள்ளதால், சுற்றுலாப் பயணிகள் மகிழ்ச்சியடைந்துள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

(வாய்ஸ் பைட் - கண்ணன் 46 செகண்ட்ஸ்)

>>>>>>><<<<<<

மாவட்டச் செய்திகள்

காஞ்சிபுரத்தில் உள்ள அருள்மிகு வரதராஜ பெருமாள் திருக்கோவிலில் 4 கோடி ரூபாய் செலவில் புதிய திருத்தேர் அமைக்கும் பணியினை மாநில அமைச்சர்கள் திரு. தென்னரசு, திரு. ரஞ்சித்குமார் ஆகியோர் இன்று தொடங்கி வைத்தனர்.

>>>>>>><<<<<<

மேட்டூர் அணையிலிருந்து பாசனத்திற்காக விரைவில் தண்ணீர் திறந்துவிடப்படும் என்று அறிவிப்பு வெளியானதை முன்னிட்டு, சேலம் மாவட்ட ஆட்சியர் திரு. இளம் பகவத் தலைமையில், காவல்துறையினர் அந்த அணையில் ஆய்வு மேற்கொண்டனர்.

>>>>>>><<<<<<

நாமக்கல் மாவட்டம், குமாரபாளையம், பள்ளிப்பாளையம் பகுதிகளில் விதிமுறைகளை மீறி செயல்பட்ட 21 சாயப்பட்டறைகளின் மின்இணைப்புகளை அதிகாரிகள் துண்டித்தனர்.

>>>>>>><<<<<<

சென்னை மாநகராட்சிக்கு உட்பட்ட 62 ஆட்டோ நிறுத்தங்களில் போதைப்பொருட்களுக்கு எதிரான விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன.

>>>>>>><<<<<<

விளையாட்டுச் செய்திகள்

ஆசிய ஜூனியர் கிளாசிக்கல் செஸ் சாம்பியன் போட்டியில் இந்தியா இரண்டு தங்கப்பதக்கங்களை வென்றது.

மும்பையில் நடைபெற்ற இப்போட்டியின் மகளிர் பிரிவில், *Pratitee Bordoloi*-ம் ஆடவர் பிரிவில் *Mayank Chakaravati*-யும் தங்கப்பதக்கம் வென்றனர்.

>>>>>>><<<<<<

உலக படகு சாம்பியன் போட்டியில், இந்தியாவின் *Ujjwal Kumar - Rohit* இணை இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளது.

நெதர்லாந்தின் *Amsterdam*-ல் நடைபெற்று வரும் இப்போட்டியின் தகுதிச் சுற்று ஆட்டத்தில் பெற்ற கூடுதல் புள்ளிகள் அடிப்படையில் இந்த இணை இறுதிச் சுற்றுக்கு தகுதி பெற்றது.

>>>>>>><<<<<<

*Budapest* ஓப்பன் ஸ்குவாஷ் போட்டியில் இந்தியாவின் *Veer Chotrani* மற்றும் வேலவன் செந்தில்குமார் காலிறுதிக்கு முன்னேறியுள்ளனர்.

இப்போட்டியின் காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டங்களில் *Veer Chotrani* 13-11, 12-14, 11-9, 12-10 என்ற செட்கணக்கில் போர்ச்சுக்கலின் *Rui Soares*-ஐ வென்றார்.

வேலவன் செந்தில்குமார் 11-9, 6-11, 11-7, 11-2 என்ற செட்கணக்கில் ஜெர்மனியின் *Raphiel Kandra*-வை வென்றார்.

>>>>>>><<<<<<

*Pontianak* சர்வதேச சேலஞ்ச் பேட்மிண்டன் போட்டியில், இந்தியாவின் *Mansa Rawat - Gayatri Rawat* இணை காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளது.

இந்தோனேஷியாவில் நடைபெற்று வரும் இப்போட்டியின், மகளிர் இரட்டையர் பிரிவு இரண்டாவது சுற்று ஆட்டத்தில் இந்த இணை, 21-18, 14-21, 21-17 என்ற செட்கணக்கில் இந்தோனேஷியாவின் *Nur Hafidzah Afifah – Shafira Atha Azzalia* இணையை வென்றது.

ஒற்றையர் பிரிவுகளில் *Anwesha Gowda, Durga Esha Kandrapu, Rujula Ramu, Naren Shankar Iyer, Tanvi Patri* ஆகியோர் இரண்டாவது சுற்றுக்கு தகுதி பெற்றுள்ளனர்.

>>>>>>><<<<<<

ஒருநாள் கிரிக்கெட் போட்டிகளுக்கான தரவரிசை பட்டியலில், இந்தியா தொடர்ந்து முதலிடத்தில் நீடிக்கிறது.

>>>>>>><<<<<<

*உஸ்பெகிஸ்தானுக்கு எதிரான இரண்டு நட்புணர்வு கால்பந்து போட்டிகளில் பங்கேற்பதற்காக, 17 வயதுக்குட்பட்டோருக்கான இந்திய மகளிர் அணி, தாஷ்கண்ட் சென்றடைந்தது.*

*>>>>>>END<<<<<<*